# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066904

1. District மாவட்டம் : Nilgiris | PS: காவல்நிலையம் V&AC, Ooty | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 6/19 | Date: நாள் 3.6.2019

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 8

   (ii) Act சட்டம்: Cr. PC Sections பிரிவுகள்: 102.

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 31.5.19 Date to : நாள் வரை Prior to 17.05 hrs.

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 3.6.19 Time to : நேரம் வரை 12.30 hrs.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் H. Ravikumar. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A.B. Haldurai

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Hindu (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Spl Tahsildar (Vilection Section) (g) Address : முகவரி i/c District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) R. Baskaran, Motor Vehicle Inspector, RTO check Post, Thorappalli, Gudalur.

   2) M. Ramesh Babu, Office Assistant, RTO check Post, Thorappalli, Gudalur

   3. Raju, (Private Individual)

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   அலுவலக நடவடிக்கையால் தாமதம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ....................... Rank ....................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Geethalakshmi 3/6/19

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 3. 6. 2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை .....................No. எண் .........
ஆய்வாளர், உ.த.க.பிரிவு
நீலகிரி மாவட்டம்.

ஊ.த.க.பிரிவு கு.எண்.6/2019/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:- பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 03.06.2019-ம் தேதி, 12.30 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தனி வட்டாட்சியர் (தேர்தல்), பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.H.ரவிக்குமார் அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் H.ரவிக்குமார், தனி வட்டாட்சியர் (தேர்தல்), மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர், பொருள்: திடீர் தணிக்கை - நடவடிக்கை கோருதல் - சம்பந்தமாக. பார்வை: நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண்.ப.வெ.30/2018 நாள்:31.05.2019. கடந்த (31.05.2019) உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் பார்ட்டி சகிதம், கூடலூர் தாலுகா, கூடலூரிலிருந்து கர்நாடகா மாநிலம் மைசூர் செல்லும் சாலையில் அமைந்துள்ள தொரப்பள்ளி வட்டார போக்குவரத்து சோதனை சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களிருந்து தொரப்பள்ளி வட்டார போக்குவரத்து சோதனை சாவடி வழியாக தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு செல்லும் உள்ளூர் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வரும் டூரிஸ்ட் டாக்சி ஓட்டுநர்களிடமும், கனரக வாகன ஓட்டுநர்களிடமும் தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதற்கும், மற்ற மோட்டார் வாகன வழக்குகள் தொடர்பாக ஓட்டுநர்களிடமும், வாகன உரிமையாளர்களிடமும் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை போக அதிகப்படியான பணத்தை கையூட்டாக கேட்டுப்பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில், தொரப்பள்ளி வட்டார போக்குவரத்து சோதனைச் சாவடியை இன்று (31.05.2019) 17.05 மணிமுதல் 20.05 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம். இந்த திடீர் தணிக்கையின்போது, அரசு கட்டணம் போக, அதிகப்படியாக வசூலிக்கப்பட்ட

B.Geethalakshmi
3/6/19

தொகை ரூ.5,785/- இருந்தது. இது குறித்து தொரப்பள்ளி வட்டார போக்குவரத்து சோதனை சாவடியின் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இரா.பாஸ்கரன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ரமேஷ்பாபு ஆகியோரிடம் விளக்கம் கேட்க, அலுவலக உதவியாளர் தற்காலிக அனுமதி சீட்டு மற்றும் இதர பணிகளுக்காக வாகன ஓட்டிகளிடம் அரசு கட்டணத்தைவிட அதிகமாக வசூலித்ததாகவும், அந்த தொகைதான் இது என்றும் கூறினார். மேலும் அலுவலக உதவியாளர் திரு.ரமேஷ்பாபுவிடம் அவரது பேண்டின் வலதுபக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.11,000/-ஐ பற்றி கேட்க, அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் அந்த பணம் கைப்பற்றப்பட்டது. ராஜப என்பவரிடமிருந்து பணம் ரூ.4,500/-மும், சோதனை சாவடி அலுவலகத்தில் கேட்பாரற்று கிடந்த ப்ரௌன் கலர் பர்ஸிருந்த பணம் ரூ.10,000/- ஆகமொத்தம் பணம் ரூ.31,285/- (ரூபாய் முப்பத்தோராயிரத்து இருநூற்று எண்பத்தைந்து மட்டும்), ப்ரௌன் கலர் பர்ஸ் மற்றும் உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலரின் சான்றொப்பம் பெற்ற தொரப்பள்ளி வட்டார போக்குவரத்து சோதனை சாவடியில் 31.05.2019-ம் தேதி காலை 08.00 மணிமுதல் 17.05 மணிவரை பராமரிக்கப்பட்டு வந்த பணப்பதிவேட்டின் நகல்கள் (9 பக்கங்கள்) ஆகியவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இடம்: உதகமண்டலம் நாள்:03.06.2019 ஒப்பம் (H.ரவிக்குமார்) தனி வட்டாட்சியர் (தேர்தல்) மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். நகல்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. நகல்: மாவட்ட ஆட்சித் தலைவர், உதகமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. Submitted: Received the above written complaint along with cash Rs.31,285/- and documents on 03.06.2019 at 12.30 p.m. and registered the same in VAC, The Nilgiris Cr.No.6/2019 u/s 8 of PC (Amendment) Act 2018 and 102 Cr.PC ஒப்பம் கீதாலட்சுமி 3.6.19 Inspector of Police, V & AC, The Nilgiris. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of the Surprise Check conducted on 31.05.2019 between 17.05 hrs and 20.05 hrs at the RTO Check Post, Thorappalli, Gudalur Taluk, The Nilgiris District முன்னிலை:

Geethalakshmi
3/6/19

1) திரு.H.ரவிக்குமார், தனி வட்டாட்சியர் (தேர்தல்) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 31.05.2019-ஆம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தனி வட்டாட்சியர் (தேர்தல்), (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம் திரு.H.ரவிக்குமார், ஆகிய நான், நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுகா, தொரப்பள்ளி வட்டார போக்குவரத்து கழக சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலிருந்து வரும் வாகன ஓட்டுநர்களிடமும் மற்ற வாகன ஓட்டுநர்களிடமும் தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதற்கும், வெளிமாநிலங்களிலிருந்து வரும் வாகனங்கள் தமிழ்நாட்டில் நுழைய வரி செலுத்தாத வாகனங்களை கண்டுகொள்ளாமல் விடுவதற்கும் மற்றும் இதர வாகனம் சம்மந்தமான குறைகளின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கும் வாகன ஓட்டுனர்களிடமும், கிளினர்களிடமும், வாகன உரிமையாளர்களிடமிருந்தும் பணம் கையூட்டாக கேட்டுப்பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் நான், நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் பார்ட்டி சகிதம் இன்று (31.05.2019) 17.05 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொண்டோம். திடீர் தணிக்கை சகிதம் 17.05 மணிக்கு நான் மேற்படி குழுவினருடன் தொரப்பள்ளி வட்டார போக்குவரத்து சோதனைச்சாவடியின் உள்ளே நுழைந்தபோது, சோதனைச் சாவடி அலுவலகத்தின் நுழைவாயிலின் அருகே அலுவலக உதவியாளர் திரு.M.ரமேஷ்பாபு அமர்ந்திருந்தார். அவரை விசாரிக்க தான் இந்த சோதனை சாவடியில் அலுவலக உதவியாளராக பணிபுரிவதாகவும், இன்று உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.V.கதிரவன் ஆய்வு செய்வதற்காக வந்திருப்பதாகவும் அவர் மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் அமர்ந்திருப்பதாகவும் சொன்னார். அங்கு சென்று வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அறிமுகம் செய்துக்கொண்டு அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் வலதுபக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5,500/- எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து விசாரிக்க அவர் நேற்று சென்னை ஆய்வுக்கூடத்திற்கு சென்றுவிட்டு இன்று காலையில் உதகமண்டலம் வந்து தணிக்கைக்காக இந்த சோதனைச் சாவடிக்கு வந்திருப்பதாகவும், இந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்றும் கூறினார். எனவே அந்த பணம் ரூ.5,500/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அவரை அழைத்துக்கொண்டு அவர்

B.Geethalakshmi
3/6/19

முன்னிலையில் அலுவலக உதவியாளர் ரமேஷ்பாபுவை விசாரிக்க, அவர் இன்று மோட்டார் வாகன ஆய்வாளர் அவருடைய கையில் காயம் ஏற்பட்டதால், தன்னால் தற்காலிக அனுமதி சீட்டு மற்றும் இதர எழுத்து வேலைகளை செய்ய முடியாததால் தன்னை பதிவேடுகளில் பதிவு செய்யச் சொன்னதாகவும், அதனடிப்படையில் தானும் பதிவு செய்து வருவதாகவும் சொன்னார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் வலதுபக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.11,000/- எடுத்து ஆஜர் செய்தார். இதுபற்றி விசாரிக்க அந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் சொல்லாததால் அந்த பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அவர் அமர்ந்திருந்த மேஜையின் மேல் வெளியூர் மற்றும் உள்ளூர் செல்லும் வாகனங்களுக்கு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதற்கான பதிவேடு புத்தகங்கள் இரண்டும், இச்சோதனைச் சாவடியின் பணப்பதிவேடும் இருந்தது. அலுவலக உதவியாளர் அமர்ந்திருந்த இருக்கைக்கு வலதுபுறமாக கணிணியும், அதன் எதிரே இருந்த சேரில் இந்த சோதனைச்சாவடியினுடைய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இரா.பாஸ்கரன் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய சீருடையில் இருந்த பேண்டின் இடதுபக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.480/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அது அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் அருகில் ராஜப என்பவர் நின்றுக்கொண்டிருந்தார். அவரை விசாரிக்க, அவர் இந்த சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு சமையல் செய்து கொடுப்பதாக சொன்னார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தனது சட்டையின் இடதுபக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.4,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இதைப்பற்றி விசாரிக்க, ராஜப சரியான முகாந்திரம் சொல்லாததால் அந்த பணம் ரூ.4,500/- கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இந்த சோதனைச்சாவடியின் மோட்டார் வாகன ஆய்வாளர் இரா.பாஸ்கரனிடம் இன்று தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதற்கும், இதர வேலைகளுக்கும் அரசு கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகையைப் பற்றி கேட்க அவர் இந்த சோதனைச்சாவடியினுடைய பணப்பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அதை வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கதிரவன் முன்னிலையில் தணிக்கை செய்யப்பட்டது. இன்று 31.05.2019-ம் தேதி காலை 08.00 மணிமுதல் இந்த சோதனைச்சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இரா.பாஸ்கரனும் அலுவலக உதவியாளர் திரு.ரமேஷ்பாபுவும் பணியில் இருப்பதா வட்டார போக்குவரத்து அலுவலர் கூறினார். மேலும் இன்று காலை 08.00 மணிமுதல் 17.05 மணிவரை சென்ற வாகனங்களுக்கு தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்கும், வழக்கு பதிவு செய்ததற்கும் மற்றும் இதர அரசு கட்டணமாக வசூலிக்கப்பட்ட

SGeethalakshmi
3/6/19

தொகை மொத்தம் ரூ.1,17,875/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினேழாயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து மட்டும்) என பணப்பதிவேட்டில் குறிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த பணம் பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடமும், அலுவலக உதவியாளரிடமும் விளக்கம் கேட்க, அவர்கள் அலுவலக உதவியாளர் இருக்கைக்கு எதிரே இருந்த மேஜையின் டிராயரிலிருந்து பணம் ரூ.42,660/-மும், மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறையின் பணப்பெட்டியிலிருந்து பணம் ரூ.81,000/-மும் எடுத்து ஆஜர் செய்தார்கள். ஆக மொத்தம் பணம் ரூ.1,23,660/- இருந்தது. இதில் அதிகப்படியான பணம் ரூ.5,785/- இருந்தது. இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோரிடம் விளக்கம் கேட்க, அலுவலக உதவியாளர் ரமேஷ்பாபு தற்காலிக அனுமதி சீட்டு மற்றும் இதர பணிகளுக்காக வாகன ஓட்டிகளிடம் அரசு கட்டணத்தைவிட அதிகமாக வசூலித்ததாகவும், அந்த தொகைதான் இது என்றும் கூறினார். எனவே, அந்த பணம் ரூ.5,785/-ம் கைப்பற்றப்பட்டது. மேலும் பணப்பெட்டியில் ஒரு கவர் இருந்தது. அந்த கவரை பிரித்துப்பார்க்க பணம் ரூ.2,070/-இருந்தது. அதைப்பற்றி பாஸ்கரிடம் கேட்க அவர் ஒரு சதவீத வரியாக வசூலித்த தொகை என்று கூறினார். எனவே, அந்த பணம் பாஸ்கரனிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக கணினிக்கு அருகில் இருந்த UPS-ன் மேல் ஒரு ப்ரௌன் கலர் பர்ஸ் இருந்தது. அதைப்பார்க்க, அதனுள் பணம் ரூ.10,000/- இருந்தது. இதுபற்றி கேட்க, இந்த பர்ஸ் யாருடையது என்று தெரியவில்லை என்று கூறினார்கள். எனவே, அந்த பர்ஸும் பணம் ரூ.10,000/-மும் கைப்பற்றப்பட்டது. எனவே, மேற்படி வாகன ஓட்டிகளிடமிருந்து அரசு கட்டணம் போக, அதிகப்படியாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.5,785/-ம், தகுந்த முகாந்திரம் சொல்லாத அலுவலக உதவியாளரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.11,000/-மும், ராஜா என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,500/-ம், பர்ஸிலிருந்த பணம் ரூ.10,000/-மும் ஆகமொத்தம் பணம் ரூ.31,285/- (ரூபாய் முப்பத்தோராயிரத்து இருநூற்று எண்பத்தைந்து மட்டும்) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலர் உடனிருந்தார். பணப்பதிவேட்டினுடைய இன்றைய குறிப்புகள் அடங்கிய ஒன்பது பக்கங்களினுடைய ஒளிப்பதிவு நகலை வட்டார போக்குவரத்து அலுவலர் சான்றொப்பம் செய்து வழங்கினார். இந்த சோதனையின்போது, சோதனைச்சாவடி அலுவலர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டார்கள். இந்த திடீர் தணிக்கையானது இன்று (31.05.2019) 20.05 மணிக்கு முடிக்கப்பட்டது. இதில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) திரு.H.ரவிக்குமார், வட்டார போக்குவரத்து அலுவலர்

Dr. Geethalakshmi
3/6/19

திரு.N.V.கதிரவன், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.இரா.பாஸ்கரன் மற்றும் இச்சோதனைச் சாவடியினுடைய அலுவலக உதவியாளர் திரு. M.ரமேஷ்பாபு ஆகியோர் கையொப்பம் செய்தனர். இந்த செயல்முறையானது கணிணியில் தலைமைக்காவலர் நா.சக்தி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 03.06.2019-ம் தேதி 12.30 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/2019/AC/NI சட்ட பிரிவு 8 of PC (Amendment) Act, 2018 மற்றும் 102 கு.வி.மு.ச வின் படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை, கேட்பாரற்று கிடந்த ப்ரௌன் கலர் பர்ஸ் மற்றும் உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலரின் 31.05.2019-ம் தேதி 08.00 மணிமுதல் 17.05 மணிவரை பராமரிக்கப்பட்ட தொரப்பள்ளி வட்டார போக்குவரத்து சோதனை சாவடியின் பணப்பதிவேட்டின் நகல்கள் (9 பக்கங்கள்) ஆகியவற்றை கணம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Geethalakshmi
3/6/19
பி.கீதாலட்சுமி
காவல் ஆய்வாளர்
உ.த.க.பி. நீலகிரி மாவட்டம்.